**இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**

**பிறப்பிப்பவர்:திருமதி.கோ. சரஸ்வதி, எம்.எஸ்.சி., எம்.எட்.,**

**நி.மு.எண். 253 /அ1 / 2022, நாள். .12.2024.**

**பொருள் :** கருணை அடிப்படையில் பணி நியமனம் – இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் ஒன்றியம், குப்பக்கல்மேடு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி – பட்டதாரி ஆசிரியர் - திரு.கி.எத்திராஜு என்பார் பணிக்காலத்தில் 09.11.2015 அன்று இயற்கை எய்தினார் - அன்னாரின் வாரிசு திரு.எ.விவேகானந்தன் என்பார் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக 01.08.2023 முற்பகல் பணிநியமனம் - இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்- சார்பு.

**பார்வை :**

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.026062/ஜே/இ4/2023, நாள்.28.07.2023.
2. இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.253/அ1/2022, நாள்.31.07.2023.
3. அரசாணை(நிலை)எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1)த்துறை நாள்.08.03.2023.
4. அரசுக் கடித (efile)எண்.4419/தொ.க.1(1)/2024-1, நாள்.17.05.2024.
5. சென்னை-06 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 026062/ஜே/இ2/2023 நாள்.22.05.2024.
6. இராணிப்பேட்டை மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை) கடித ந.க.எண்.2689/அ1/2024, நாள்.25.11.2024.

-----

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் ஒன்றியம், குப்பக்கல்மேடு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த போது 09.11.2015 அன்று காலமான திரு.கி.எத்திராஜு என்பாரின் வாரிசுதாரரான மகன் திரு.எ.விவேகானந்தன் என்பாருக்கு பார்வை(1) மற்றும் (2)இல் காணுமாறு கருணை அடிப்படையில் இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிவாய்ப்பு வழங்கப்பட்டு பணியில் சேர்ந்த நாளான 01.08.2023 முற்பகல் பணிவரன்முறை செய்திட கோரி பார்வை (6)ன்படி பரிந்துரைக்கப்பட்டது.

பணிவரன்முறை செய்திட எவ்வித விதித்தளர்வுகள் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத நேர்வில் பார்வை(4)இல் காணும் அரசாணையில் இனம் 16 -இன்படி சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டியல் கீழ் உள்ள பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட ஆணையிடப்பட்டுள்ளது.

CamScanner

பார்வை (3)இல் காணும் அரசுக் கடிதத்தில் வெளியிடப்பட்ட தெளிவுரையின்படி விதித்தளர்வு தேவைப்படும் நேர்வுகளுக்கு மட்டும் அரசிற்கு கருத்துருக்கள் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தனியருக்கு எவ்வித விதி தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்லவ(3)ல் காணும் அரசாணை மற்றும் (4)ல் அரசுக் கடிதத்தின்படி கீழ்காணுமாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பணிவரன்முறை செய்யப்படும் பணியாளரின் பெயர், பதவி திரு./திருமதி./ செல்வன்/செல்வி | இறந்த அரசு ஊழியரின் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| திரு.எ.விவேகானந்தன், இளநிலை உதவியாளர், | திரு.கி.எத்திராஜ், பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குப்பக்கல்மேடு, சோளிங்கர் ஒன்றியம், இராணிப்பேட்டை மாவட்டம். | 01.08.2023 முற்பகல் | 01.08.2023 முற்பகல் |

நிபந்தனைகள்

1. இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்த நாளில் இருந்து இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும்.
2. தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகள்/ பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டும்.
3. தகுதிகாண் பருவம் முடித்தல் ஆணை வழங்கப்பட்ட பின்னரே 2வது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்கப்பட வேண்டும்.

பணிவரன்முறை சார்ந்த பதிவுகளை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறும், அசல் ஆணை, அசல் கல்விச் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் வழங்குமாறும் சார்ந்த அலுவலர்/தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு - அசல் பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
இராணிப்பேட்டை.

பெறுநர் -

சார்ந்த பணியாளர் (தலைமையாசிரியர் மூலமாக)

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), இராணிப்பேட்டை
2. தலைமையாசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சோளிங்கர்.
3. கோப்பிற்கு

CamScanner